# அக்டோபர் – 19 – வெள்ளி

**புனித பவுல் அடிகளார்**

**நீதிமான்களே, ஆண்டவரில் களிகூருங்கள்: திபா. 33:1**

## முதல் வாசகம் : ஏபேசியர் 1 : 11 - 14

சகோதர சகோதரிகளே!கடவுள் தமது திருவுளத்தின் திட்டத்தின்படி அனைத்தையும் செயல்படுத்தி வருகிறார். அவரது தீர்மானத்தால் நாம் முன்குறிக்கப்பட்டு, கிறிஸ்து வழியாய் அவரது உரிமைப் பேற்றுக்கு உரியவரானோம்.இவ்வாறு கிறிஸ்துவின்மேல் முதலில் நம்பிக்கை வைத்த நாங்கள் கடவுளுடைய மாட்சியைப் புகழ்ந்து பாடவேண்டுமென அவர் விரும்பினார்.நீங்களும், உங்களுக்கு மீட்பளிக்கும் நற்செய்தியாகிய உண்மையின் வார்த்தையைக்கேட்டு, அவர்மீது நம்பிக்கை கொண்டு, வாக்களிக்கப்பட்ட தூய ஆவியால் அவருக்குள் முத்திரையிடப்பட்டீர்கள்.அந்தத் தூய ஆவியே நாம் மீட்படைந்து உரிமைப்பேறு பெறுவோம் என்பதை உறுதிப்படுத்தும் அடையாளமாக இருக்கிறது. இவ்வாறு கடவுளது மாட்சியின் புகழ் விளங்கும்.

**பதில்பாடல் :** ஆண்டவர் தமது உரிமைச் சொத்தாகத் தேர்ந்தெடுத்த மக்கள் பேறுபெற்றோர்.

## நற்செய்தி : லூக்கா 12 : 1 - 7

அக்காலத்தில் ஒருவரையொருவர் மிதிக்கும் அளவுக்கு ஆயிரக்கணக்கான மக்கள் திரண்டு வந்திருந்தபோது இயேசு முதலில் தம் சீடரோடு பேசத்தொடங்கினார். அவர் அவர்களிடம் கூறியது : “பரிசேயருடைய வெளிவேடமாகிய புளிப்பு மாவைக் குறித்து நீங்கள் எச்சரிக்கையாய் இருங்கள். வெளிப்படாதவாறு மூடப்பட்டிருப்பது ஒன்றும் இல்லை. அறியப்படாதவாறு மறைந்திருப்பதும் ஒன்றும் இல்லை.ஆகவே நீங்கள் இருளில் பேசியவை ஒளியில் கேட்கும். நீங்கள் உள்ளறைகளில் காதோடு காதாய்ப் பேசியவை வீடுகளின் மேல்தளத்திலிருந்து அறிவிக்கப்படும். என் நண்பர்களாகிய உங்களுக்கு நான் சொல்கிறேன். உடலைக் கொல்வதையன்றி வேறு எதுவும் செய்ய இயலாதவர்களுக்கு அஞ்ச வேண்டாம். நீங்கள் யாருக்கு அஞ்ச வேண்டுமென நான் உங்களுக்கு எடுத்துக்காட்டுகிறேன். கொன்றபின் நரகத்தில் தள்ள அதிகாரமுள்ளவருக்கே அஞ்சுங்கள் ஆம், அவருக்கே அஞ்சுங்கள் என நான் உங்களுக்குச் சொல்கிறேன். இரண்டுகாசுக்கு ஐந்து சிட்டுக்குருவிகள் விற்பதில்லையா? எனினும் அவற்றில் ஒன்றையும் கடவுள் மறப்பதில்லையே. உங்கள் தலைமுடி எல்லாம் கூட எண்ணப்பட்டிருக்கின்றன. அஞ்சாதீர்கள் சிட்டுக்குருவிகள் பலவற்றை விட நீங்கள் மேலானவர்கள்” என்றார்.

**தியானம்:** இந்த நூற்றாண்டில் அறிவியல் வளர்ச்சி ஒருபுறம் அபரிவிதமாக இருந்தாலும் மறுபுறம் மனிதனின் பய உணர்வும் பல மடங்காகிக் கொண்டு வருகிறது. இந்த பய உணர்வு மனிதனின் ஆளுமை வளர்ச்சியை முற்றிலும் அழித்து விடுகிறது. மேலும் கோபம், பழிவாங்குதல், பொறாமை, கவலை போன்ற இன்னும் பல எதிர்மறையான உணர்வுகளுக்கும் காரணமாய் இருப்பது இந்த பய உணர்வே என்று உளவியலாளரகள் கூறுகின்றனர். இத்தகைய கொடூரமான பய உணர்விலிருந்து விடுபட இயேசு இரண்டு வழிகளைச் சுட்டிக்காட்டுகிறார்.

1)நம்மோடு உள்ள மனிதர்கள் நம்மீது ஏற்படுத்தக்கூடிய அதிகபட்ச பாதிப்பு உடல் அளவில் மட்டும் இருக்க முடியும். நம்முடைய அகத்தை அதாவது விலை மதிப்பற்ற ஆன்மாவை அவர்கள் அண்டக்கூட முடியாது. எனவே நாம் அஞ்சத்தேவையில்லை. 2)நம் ஒவ்வொருவரையும் யார் கை விட்டாலும் இறைவன் பாதுகாத்து வருகின்றார். சாதாரண புல்லையே இந்த அளவிற்கு அதிகமாக அன்பு செய்து பராமரிக்கும் இறைவன் மனிதர்களாகிய நம்மை எந்த அளவிற்கு அதிகமாக அன்பு செய்து பராமரிக்க வேண்டும் என்ற சிந்தனையை நம் மனதில் இருத்த அழைக்கப்படுகின்றோம். எனவே தேவையற்ற பயங்களை அகற்ற தேவையானது ‘தெய்வ பயம்’ என்பதை உணர்ந்திருக்கின்றேன், என்பதை சிந்தித்துப்பார்க்க இன்றை நற்செய்தி நமக்கு அழைப்பு விடுகிறது.